விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com


சங்கு 25
ஒலி 095 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 10 சனிக்கிழமை (23.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யுத்தத்தால் இழந்துவிட்டோம் என இருக்க முடியாது

# வட மாகாணம் வீழ்ந்த இடத்திலிருந்து மீள திடசங்கற்பம் கொள்ள வேண்டும்

## யாழ்ப்பாணத்தில் ரணில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தால் அனைத்தையும் இழந்து விட்டோம் என அப்படியே இருக்க முடியாது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணம் வீழ்ந்த இடத்தில் இருந்து மீள்வதற்கு திடசங்கற்பம் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று வெள்ளிக்கிழமை வலி.வடக்கில் இரா ணுவக் கட்டுப்பாட்டில் 33 வருடங்களாக காணப் பட்ட பொதுமக்களுடைய காணிகளை மீளவும் பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். 04

---

### வவுனியாவில்
## ஆணொருவரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற் றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் ஆலடிவீதியில்உள்ள பலசரக்கு வியாபார 15

---

## ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்டது யார் என்பது எனக்குத் தெரியும்
### நீதிமன்றம் கோரினால் வெளிப்படுத்துவேன் - மைத்திரி

(கண்டி)

உயிர்த்த ஞாயிறு தாக்கு தலை உண்மையில் யார் மேற் கொண்டது என்பது தனக்குத் தெரியும் எனவும் நீதிமன்றம் கோரிக்கை விடுத்தால், அதனை வெளிப்படுத்துவதற்கு தான் தயார் எனவும் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன கண்டியில் நேற்று அது தொடர் பில் தெளிவுபடுத்தி 15



---

### கடும் வெப்பம்
## மாத்தறையில் ஒருவர் மரணம்

(மாத்தறை)

மாத்தறை அக்குரஸ்ஸ, திகல பகுதியில் அதிக வெப் பம் காரணமாக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக மோட் டார் சைக்கிளில் 15

---

## அமைச்சர் டக்ளஸின் உறுதிமொழியையடுத்து மீனவர்களின் உணவுத் தவிர்ப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்து மீறிய செயற்பாடுகளை நிறுத்து மாறு கோரி நான்கு நாட்கள் இடம் பெற்ற உணவு தவிர்ப்புப் போராட் டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதி மொழியையடுத்து கைவிடப்பட்டது.

கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் 15



---

### மாவீரர் நினைவேந்தல்
## அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக சட்டமா அதிபர் உறுதி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங் களில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் நினை வாக இதுவரை கொண்டாடப் பட்ட மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பில் விரிவான விசா ரணை அறிக்கையை சமர்ப் பிக்க எதிர்பார்ப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதி மன்றத்திற்கு அறிவித்துள் ளார்.

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராக சட்ட நடவடி க்கை எடுக்குமாறு 15

---

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு
### 20 கிலோ அரிசி வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டை இலக்காகக் கொண்டு ஏழ்மை மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோகிராம் அரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் 85 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய 11 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய் 04

---

### தாய்ப்பால் புரைக்கேறியதில்
## 28 நாட்களேயான சிசு மரணம்

(கரணவாய்)

தாய்ப்பால் புரைக்கேறிய தில் பிறந்து 28 நாட்களேயான சிசு ஒன்று நேற்று வெள்ளிக் கிழமை உயிரிழந்துள்ளது.

கொக்குவில் மேற் கைச் சேர்ந்த சசி 16

---

### ஜனாதிபதி ரணிலால் வலி.வடக்கில்
## இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பொதுமக்கள் காணி விடுவிப்பு



04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில்

ஈழத்து தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## பங்குனி உத்தர சங்காபிஷேகமும் பௌர்ணமித் திருவிளக்குப் பூஜையும் 2024

*ராகம் கல்யாணி*

ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி



**பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்**

24.03.2024 ஞாயிறு காலை 8.00 மணிக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் சுற்றுப்பிரகார, பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம், விசேட பூஜை, நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம் இடம்பெறும்)

பி.ப 4.00 மணிக்கு ஸ்ரீசக்கர பூஜை
5.00 மணிக்கு திருவிளக்குப் பூஜை
6.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல்
7.30 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் பழைய தெருவீதி உலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்

**விழா உபயம்**
**அரச ஊழியர்களும் ஒய்வூதியம் பெறுவோரும்**


"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

இங்ஙனம் - பரிபாலன சபை

(C-8588)

# மரண அறிவித்தல்

மலர்வு 07 - 04 - 1942



உதிர்வு 19 - 03 - 2024

## வையித்தி தம்பிராசா

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வையித்தி தம்பிராசா அவர்கள் 2024-03-19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வையித்தி - பொன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லப்பா, சுந்தரம், மாரிமுத்து, சுந்தரி, கிருஷ்ணப்பிள்ளை ஆகியோரின் ஆருயிர் சகோதரரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தீற்றா, புஸ்பலதா மற்றும் மேகலதா, ஜெயராசா, ஜெகதீசன், பிறேமலதா, ஜெபாநத், சுமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன்ராஜ், ஜெசிகா, கீதா, ஸ்கந்தராஜ், ரேணுகா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தூரிகா, தூரிகன், றோகித், ரித்திகா, றொனிஷன், றிஸ்மிகா, ஊர்ஜனா, றுக்ஷனா, றக்ஷனா, றாகித், அஸ்வின், அஸ்னவி, அஸ்ஜெனன், அக்ஷயன், அகிஷன், அஜீஸ், அபிஷன், அருஷன், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 24.03.2024 அன்று முற்பகல் 08.00 மணிமுதல் 11.00 மணிவரை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வை.கி.தனபாலா
077 677 9348

(0198)

தகவல்
குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## அமுதலிங்கம் தேனுஜா

15.03.2024 அன்று யாழ். பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் B.A .Hons பட்டத்தைப் பெற்றுக் கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
மாமி மற்றும்
நந்தகோபன் குடும்பம்,
விஜிகரன் குடும்பம்

(196)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## அமுதலிங்கம் தேனுஜா

15.03.2024 அன்று யாழ். பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் B.A .Hons பட்டத்தைப் பெற்றுக் கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
பெரியப்பாமார்
(ரதீசன், சதீசன், ஜெகதீசன் குடும்பத்தினர்)

(196)

# காணி விற்பனைக்கு உண்டு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- புத்தூர் மட்டுவில் பிரதான வீதியில் இருந்து 100m இல்.
- 20 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
- 2 பரப்பு – 4 1/2 இலட்சம்
- நல்ல மேட்டுக் காணி

பார்வையிடும் நேரம் - 8.30 Am - 6.00 Pm

**076 109 8504, 076 659 0583**
**077 612 2971**

(0194)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரையறுக்கப்பட்ட அளவைவிட
# சுமார் 3 மடங்கு சீனியை
## அதிகமாக உள்ளெடுக்கும் இலங்கையர்கள்

**(கொழும்பு)**

**உலக சுகாதார ஸ்தாபனம் வருடத்திற்கு ஒருவர் உட்கொள்ள வேண்டிய சீனியின் அளவை 13 கிலோ என வரையறுத்துள்ளது. எனினும் இலங்கையர் ஒருவர் வருடாந்தம் மூன்று மடங்கு சீனியை அதாவது 39 கிலோ சீனியை உட்கொள்வதாக வைத்தியர் ரத்நாயக்க தெரிவித்தார்.**

இலங்கையில் மக்கள் அதிக படியான சீனியை நுகர்வதால் பல் சொத்தை அதிகரித்துள்ள தாக இலங்கை பல் மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தி னால் பரிந்துரைக்கப்படும் சீனியை விட மூன்று மடங்குக் கும் அதிகமான சீனியை ஒருவர் உட்கொள்வதாக சங்கத்தின் பிரதி செயலாளர் வைத்தியர் நிலந்த ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

எனினும் இலங்கையில் உள்ள மூன்று குழந்தைகளில் ஒரு குழந்தை இரவு உறங்க செல்லும் முன் பல் துலக்குவ தில்லை என அவர் குறிப்பிட்டு ள்ளார்.

உலக வாய் சுகாதார தினத்தி ற்காக நடைபெற்ற மாநாட்டில் நிபுணர் இந்தத் தகவலை வைத் தியர் நிலந்த ரத்நாயக்க தெரி வித்தார். (நி-5)

# கனடா சென்ற அநுரவுக்கு அமோக வரவேற்பு



(கொழும்பு)

கனடாவிற்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் தலை வர் அநுரகுமார திசாநாயக்க வுக்கு ரொறன்ரோ விமான நிலையத்தில் கனடாவாழ் இலங்கையர்களால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்ட தாக தெரிவிக்கப்படுகி றது.

இன்றும் நாளையும் கனடா வின் ரொறொன்ரோ மற்றும் வான்கூவரில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்கள் மற்றும் பல சிநேகபூர்வ சந்திப்புகளில் பங் கேற்பதற்காகவே அநுர கனடா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (நி-5)

# துப்பாக்கிகள், குண்டுகள் தொடர்பில் தகவல் வழங்கினால் பணப்பரிசு
## பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் தொடர் பில் தகவல்களை வழங்குபவர் களுக்கு பரிசு வழங்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத் தரணி நிஹால் தல்துவா தெரி வித்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத் தலில் ஈடுபடும் நபர்கள் பயன் படுத்திய துப்பாக்கிகள் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கே இவ்வாறு ரொக்கப் பரிசு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, T56 துப்பாக்கியு டன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்கு தேவையான தகவல்களை வழங்குபவர்க ளுக்கு 5 இலட்சம் ரூபாவும் தானியங்கி ஆயுதங்கள் அல் லது கைத்துப்பாக்கிகளுக்கு 300,000 ரூபாவும் ரிவோல் வருக்கு 250,000 ரூபாவும் வெகுமதியாக வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடக பிரிவு விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

## சரபாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழ வைக்கின்றது
விண்ணிலிருந்து எமக்கு
வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் நாம்.

(189)

பிறப்பு 1949.07.20

இறப்பு 2023.04.04


குடும்பத்தினர்.
தெற்கிலுப்பைக்குளம்,
வவுனியா.
077 886 6865


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிக்கணக்கை தொடங்கியது சென்னை





பெங்களூர் அணியை வீழ்த்தி முதல் வெற்றி பெற்றது சென்னை. 2024 இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் முதல் போட்டியில் பெங்களூரு அணியும் சென்னை அணியும் நேற்று மோதியது.

டாஸ் வென்று முதலில் விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 173 ரன்கள் குவித்தது.

பெங்களூரு அணியின் அனுஜ் ராவத் 48 ரன்களும் டுபிளசி 35 ரன்களும் ஹோலி 21 ரன்களும் தினேஷ் கார்த்திக் ஆட்டமிழக்காமல் 38 ரன்களும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பாக ரகுமான் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். 174 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களம் இறங்கிய சிஎஸ்கே அணி, 18.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக ரகுமான் தெரிவானார். (ம)







## குறைந்த...

யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற நெல் அறுவடையை விற்பனை செய்தல் உள்ளிட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் பற்றிய சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

விவசாயத்துறையில் கொள்கை ரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதால் தோற்றம் பெற்ற நெருக்கடியை அனைவரும் நன்கு அறிவோம். இதனை விவாதிக்க போவதில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் விவசாயத்துறை மேம்படுத்த விசேட நடவடிக்கைகள் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விவசாயத்துறையை நவீனமயப்படுத்தாவிட்டால் எதிர்காலத்திலும் விவசாயத்துறை பாரிய எதிர்விளைவுகளை எதிர்க்கொள்ளும். விவசாயத்துறையை நவீனமயப்படுத்த உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கவுள்ளது. விவசாயத்துறை மேம்பாடு தொடர்பில் துறைசார் தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம்.

2022 ஆம் ஆண்டு அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். நெல் கொள்வனவுக்கு விவசாயத்துறை அமைச்சு மானியம் கோரியுள்ளது. உரிய நேரத்தில் நிதி ஒதுக்கப்படும். பெரும்போக விவசாயத்தில் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது.

சித்திரை புத்தாண்டை இலக்காகக் கொண்டு ஏழ்மை மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோகிராம் அரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட மட்டத்தில் 85 மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய 11 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 27 .4 இலட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோகிராம் அரிசி வழங்கப்பட்டது. இந்த முறையும் சுமார் 27 இலட்சம் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக முன்னேற்றமடையும் போது அதன் பயன் நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும். ரூபாவின் பெறுமதி உயர்வடைந்துள்ளது. ஆகவே இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளை குறைக்குமாறு வர்த்தகத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. புத்தாண்டு காலப்பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றார். (ம-7,10)

## இராணுவ...

வலிகாமம் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்கள் காணிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று விடுவிக்கப்பட்டது.

இரண்டு மில்லியன் மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தின் 408 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடையாள ரீதியாக காணி உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

இதற்கு இணையாக யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழிருந்த காணிகளை விவசாயிகளுக்கு கையளிக்கும் நிகழ்வும் நேற்று பலாலி விமானப்படை தளத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவினால் காணிகளை கையளிப்பதற்கான உத்தியோகபூர்வ ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றை யாழ்ப்பாண மாவட்ட பிரதி செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளித்தார்.

அதற்கமைய வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் 5 கிராம சேவகர் பிரிவுகளுக்குச் சொந்தமான 235 ஏக்கர் காணி பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதோடு, இந்த காணிகள் அரசாங்கத்தின் விவசாய நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விதைப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனையடுத்து காணி உரிமை பெற்றவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் நினைவாக மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார்.

(ம-7,10,33)

## வடமாகாணம்...

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

அடுத்த ஐந்து வருட திட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், கடற்தொழில் துறையை மேம்படுத்தல் மற்றும் மின் உற்பத்தி என பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய பல திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

வடக்கு மாகாணத்திலும் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அந்தவகையில் காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்து வருகிறோம்.

வடக்கில் அனைவரும் ஒன்றாகச் செயற்பட்டால் மிகப்பெரிய அபிவிருத்தியைக் காண முடியும்.

எல்லோரும் ஒன்றாக இணைந்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். யுத்தத்தால் அனைத்தையும் இழந்துவிட்டோம் என அப்படியே இருக்க முடியாது. அதில் இருந்து மீள வேண்டும். அதற்கு ஜேர்மன், ஜப்பான் போன்ற நாடுகளைப் போன்று வலுவான திடசங்கற்பம் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (ம-7,10,30,33,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்களில் கபில நிற தத்திகளின் தாக்கம் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலபோகத்தில் நெற்ச் செய்கையில் கபில நிற தத்தியின் தாக்கம் காரணமாக விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டனர்.

குறித்த பூச்சிகள் தற்போதும் வயல்களில் காணப்படுகின்ற நிலையில் அவற்றை கட்டுப்படுத்தி இனி வரும் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக வட்டக்கச்சி மற்றும் இராமநாதபுரம் விவசாயிகளை தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று வட்டக்கச்சி சனசமூக நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் விவசாய ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்கண்ணா கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தெளிவூட்டினார். குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர், பாடவிதான உத்தியோகத்தர், குறித்த பகுதி விவசாய போதனாசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-316)

# 'தாவர தடுப்புக்காப்பு' திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

விவசாயப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியளிக்கும் தாவரத் தடுப்புக் காப்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று காலை யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் இடம்பெற்றது.

குறிப்பாக மரக்கறி, பழங்கள், பூ விதை வகைகள், நுண்ணங்கிகள், பூ அலங்காரங்கள் போன்ற தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியளிக்கும் நிலையமே திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கிய குறித்த நிலையம் வடபகுதி மக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் தலைமை தபாலகத்தில் புதிதாக நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-33)

# இளநீருக்கு கிராக்கி

(கொழும்பு)



நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக இளநீர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

100 முதல் 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட இளநீர் தற்போது 180 முதல் 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இளநீர் உற்பத்திகள் குறைவடைந்தமையும் அதன் தேவை அதிகரித்தமையுமே இந்த விலை அதிகரிப்புக்கு காரணம்.

கடும் வெப்பநிலை காரணமாக மக்கள் அனைவரும் இளநீர் கொள்வனவு செய்வதில் அதிக விருப்பம் கொண்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறியதருகிறார். (நி-5)

# கண்டாவளை வெளிக்கண்டலில் காட்டு யானைகள் அட்டகாசம்



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வெளிக்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த மூன்று காட்டு யானைகள் வாழ்வாதாரத்திற்காக வைக்கப்பட்டிருந்த 7 தென்னை மரங்கள் மற்றும் பயன்தரக்கூடிய நிலையில் இருந்த 40 இற்கும் மேற்பட்ட வாழைகளை முற்றுமுழுதாக அளித்து துவசம் செய்துள்ளது. (நி-5-316)

# சீனோர் நிறுவனத்தின் தலைவர் பதவி விலகல்

(கொழும்பு)



அரசாங்கத்துக்கு உரித்தான படகு உற்பத்தி நிறுவனமான சீனோர் நிறுவனத்தின் தலைவர் துலான் ஹெட்டியாரச்சி தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# இராசிபலன்

23.03.2024
பங்குனி 10 , சனிக்கிழமை
திரயோதசி முற்பகல் 8.58 மணிவரை

பூரம் முழுவதும்
சுபநேரம் -3.16-4.46 மணிவரை
இராகுகாலம்-9.16-10.46 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்தராடம்.

வளவன்

**மேஷம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வழிபாடு ஆனந்தம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்,தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், திடீர் பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு.

**கன்னி**
அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செல்வ நிலை உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார் கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**தனுசு**
வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கும்பம்**
புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மீனம்**
எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

கல்வியும் அனு[illegible] சூழ்ச்சி அண்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்கு 174,000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவகங்கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த சில நாட்களாக சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தங்கள் பிரிவுகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது காலாவதியான உணவு பொருட்கள், பழுதடைந்த உணவுப் பொருட்கள், உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவகங்கள் என 14 உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் சிக்கிக்கொண்டன.

மேற்படி 14 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதி மன்றம், உணவக உரிமையாளர்களிற்கு 174,000 ரூபாய் தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தது. (நி-5-33)



யாழ்ப்பாணம் நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய முதலாவது பங்குனித் திங்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்.)

# சைவப்புலவர் சங்கத்தால் கிழக்கு மாகாணத்தில் சிவதீட்சை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத் தலைவர் இ.மேகராசா தலைமையில் சச்சிதானந்தமூர்த்திக் குருக்களினால் வழங்கப்படவுள்ள சிவதீட்சையைப் பெற விரும்புவோர் 077 176 8830 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் சிவதீட்சை பெறுபவர்களுக்கு சங்கத்தினால் சான்றிதழும் நித்திய அனுஷ்டான விதிப்புத்தகமும் வழங்கப்படும் எனவும் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தெரிவித்தார். (நி-5-30)

# மோதுண்டு தடம்புரண்ட வாகனங்கள் வீதி முழுவதிலும் கசிந்த எரிபொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் டிப்பரும் எரிபொருள் தாங்கியும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ள நிலையில் வீதிப் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

விபத்தில் மோதுண்ட இரு வாகனங்களும் தடம்புரண்டு சரிந்து விழுந்துள்ளன.

விபத்து காரணமாக எரிபொருள் தாங்கியில் இருந்த



எரிபொருள் வீதி முழுவதும் கசிந்து காணப்படுகின்றது.

சம்பவம்தொடர்பாகபொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.(நி-5-30-33)

# வீடு புகுந்து தகராறில் ஈடுபட்ட ஆறு பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் புகுந்து தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாவடி பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தகராறில் ஈடுபட்டவர்களை வீட்டின் உரிமையாளர் வீட்டின் முன் நின்று தகராறில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

அதனால் கோபமடைந்த வன்முறைக் கும்பலை சேர்ந்தவர்கள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து உரிமையாளருடன் தகராறில் ஈடுபட்டனர்

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தகராறில் ஈடுபட்ட 6 பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் (நி-5-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 160 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 | 165 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 300 | 280 |
| தக்காளி | 80 | 100 | 150 | 150 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 150 | 130 |
| கோவா | 300 | 300 | 360 | 350 | 250 |
| கரட் | 350 | 400 | 450 | 450 | 350 |
| பூசணி | 200 | 200 | 180 | 150 | 150 |
| புடோல் | 180 | 150 | 160 | 150 | 100-120 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 250 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 350 | 600 | 550 | 500 | 440 |
| பாகற்காய் | 400 | 300 | 350 | 400 | 350 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 200 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 200 | 80 |
| பயற்றங்காய் | 300 | 250 | 280 | 300 | 250-300 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 300 | 230 |
| பீற்றூட் | 300 | 200 | 300 | 300 | 200 |
| கறிமிளகாய் | 400 | 300 | 350 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 800 | 1000 | 500-900 |
| போஞ்சி | 300 | 200 | 300 | 300 | 180 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | 180 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 | 40-60 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 300 | 120-180 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-120 | 60-130 |
| இராசவள்ளி | 350 | 350 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 300 | 80 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 100 |
| [illegible] | 100 | -- | 100 | -- | 80 |

# உரிய அனுமதிப்பத்திரம் இன்றி அதிகளவு லேகியம் ஏற்றி வந்தவர் கைது



(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி அதிகளவான லேகிய பைக்கற்றுக்களை வாகனம் ஒன்றில் ஏற்றி வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாவற்குழிப் பகுதியில் வைத்து மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தென்னிலங்கையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய மகேந்திரக வாகனமும் அதிலிருந்த 72 லேகிய பைக்கற்றுக்களும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அடையாள அட்டை இல்லாததால் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ள முடியவில்லை

## மாற்றுவழி ஏற்படுத்தி தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

வறுமைக் கோட்டிற்கு உட்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற நலன்புரிக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியம் என வங்கிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில் பல குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடைத் தங்கல் முகாம்களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், முதியோர் அடையாள அட்டைகள் என்பவற்றிற்கு நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட நிலையில் தற்போது வங்கிகளினால் தேசிய அடையாள அட்டை இருந்தால்தான் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

கடந்த கால போர் காரணமாக சகல ஆவணங்களும் தொலைந்த நிலையில் தேசிய அடையாள அட்டைப் பெற்றுக் கொள்வதில் பல குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் பல குடும்பங்கள் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தி பிரதேச செயலாளர் மூலம் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது. (நி-5-350)



முல்லைத்தீவு இந்துபுரம் சனசமூக நிலையமும் இளந்துளிர் விளையாட்டுக் கழகம் பீனிக்ஸ் இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய 2023 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (படம்:-கிருஷ்ணகுமார்)



முல்லைத்தீவு மாவட்ட படப்பிடிப்பாளர் சங்கத்தினரின் 2024 ஆம் ஆண்டுக்கான படப்பிடிப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சதீஸ்)



கோண்டாவில் இராம கிருஷ்ணா வித்தியாலயத்தில் சர்வதேச நீர்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்:-சிவசாந்தன்)

## முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட

# பல வீட்டுத்திட்ட வீடுகளில் இதுவரை யாரும் குடியமரவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கு என அமைக்கப்பட்ட பல வீடுகளில் இதுவரை குடும்பங்கள் வசிக்காத நிலைமை காணப்படுகின்றது.

கரைதுறைபற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கு என அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில் குடும்பங்கள் வசிக்காத பல வீடுகள் காணப்படுகின்றன.

இவ்வீடுகளில் சமூக சீர் கேடான சம்பவங்கள் நடைபெறுவதாக கிராம பொது அமைப்புகளினால் தொடர்ச்சியாக கிராம அலுவலர்கள் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் குடும்பங்கள் வசிக்காத வீடுகளை மாற்றி புதிய பயனாளிகளுக்கு வழங்குங்கள் என குரல்கள் எழுப்பப்பட்ட போதிலும் இதுவரை இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவிக்கையில்,

இதுவரை குடும்பங்கள் வசிக்காத வீடுகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தார். (நி-5-350)


பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு பசுபதி

விஜயதாஸ்

B.Com, H.N.D.A, PGD, MEd (2nd Upper)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 16.03.2024 அன்று நடைபெற்ற 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (MEd) பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியரான திரு.பசுபதி விஜயதாஸ் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பல பட்டங்களைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

(c-8589)

வாழ்த்துவோர்: பணி[illegible] யா/தேவரையாளி இந்துக் கல்லூரி



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு : 1994 - இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: Bsc, MA<br>எதிர்பார்ப்பு:-அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14277 | பிறப்பு: 2003 - இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: -<br>உயரம்:<br>தகைமை/தொழில்: O/L. தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14209 |
| பிறப்பு:1987 -இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்- A/L . இரும்பு வேலை<br>எதிர்பார்ப்பு: குணமான பெண்<br>தொ.இ: B/14287 | பிறப்பு: 1994- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: -<br>உயரம்: 5' 4<br>தகைமை/தொழில்: Political science, MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பட்டதாரி<br>தொ.இ: G/14212 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:<br>உயரம் :5' 4"<br>தகைமை/தொழில்: O/L , Painting<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14292 | பிறப்பு: 1992 - இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: -<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/14215 |
| பிறப்பு: 1985- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:- Diploma(Canada)<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14293 | பிறப்பு -1994 -இந்து<br>நட்சத்திரம் - அத்தம்<br>கி.பா:<br>உயரம் : 5' 7"<br>தகைமை/தொழில்: College, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/14222 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# கட்டப்பட்டு வந்த பாலம் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலி

## பீகாரில் சோகம்



(டில்லி)

பீகார் மாநிலம், சுபாலில் கட்டப்பட்டு வந்த பாலம் திடீரென இடிந்து விழுந்தது. இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் இடிபாட்டில் சிக்கியுள்ளனர்.

பீகார் மாநிலம் சுபால் மாவட்டம், மாரிச்சா அருகே கோசி ஆற்றின் மீது ரூ.984 கோடி செலவில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று காலை பாலத்தின் இணைப்புப் பகுதி இடிந்து விழுந்தது. இதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 30 பேர் இடிபாட்டுக்கு அடியில் புதைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே, பீகாரின் பாகல்பூரில் கட்டப்பட்டு வந்த பாலம் இடிந்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் தற்போது சுபாலில் மீண்டும் பாலம் இடிந்து விழுந்துள்ளது.

பாகல்பூர், ககாரியா மாவட்டங்களை இணைக்கும் வகையில் கங்கை ஆற்றின் மீது இந்தப் பாலக் கட்டுமானப் பணி நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மூளைக்கு பொருத்திய சிப்பால் கணனியை இயக்கிய இளைஞன்



(வோஷிங்டன்)

எலான் மஸ்கின் நியுரோலிங் நிறுவனம் வடிவமைத்த சிப்பை மூளைக்குள் பொருத்திய முதல் நபர், தமது சிந்தனை மூலம் கணனியில் செஸ் விளையாடிய வீடியோவை நியுரோலிங் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

நரம்பு மண்டல நோயால் பாதிக்கப்பட்டவரின் எண்ணங்களை கணனி மூலம் செயற்படுத்தும் வகையில் மூளைக்கும், கணனிக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும் சிப்பை நியுரோலிங் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு டைவிங் சாகசத்தில் ஈடுபட்டபோது படுகாயமடைந்து 2 கைகளும் 2 கால்களும் செயலிழந்த நோலண்டு ஆர்பாவ் என்பவரின் மூளைக்குள் அண்மையில் இந்த சிப் பொருத்தப்பட்டது.

இந்நிலையில் எவ்வித வயர்களும் இன்றி சிப்பில் உள்ள புளூடூத் மூலம் இவரால் கணனியை கட்டுப்படுத்த முடியும் என நியுரோலிங் நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# மொங்...

# 5மில்ல...

## சர்வதேச...

(உலான்பத்து...

கிழக்காசிய...

குளிர்காலம் ச...

மூந்துள்ளதாக...

துள்ளது.



# இந்திய பிரதமர் மோடி பூட்டானுக்கு விஜயம்



(திம்பு)

இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக பூட்டானுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி சென்றுள்ளார்.

மார்ச் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை 5 நாள் பயணமாக பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே இந்தியா சென்றிருந்தார். அப்போது டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து பேசிய டோப்கே, பிரதமரை தங்கள் நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் பூடான் பிரதமர் அழைப்பின் பேரில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இரண்டு நாள் பயணமாக நேற்று அந்நாட்டுக்குப் புறப்பட்டு சென்றார். அங்குள்ள பாரோ சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி சென்றடைந்ததும் அந்நாட்டு பிரதமர் ஷெரிங் டோப்கே வரவேற்றார்.

பூட்டானுக்கு புறப்படுவதற்கு முன்னதாக பிரதமர் மோடி கூறுகையில், இந்தியா - பூட்டான் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவித்தார். (நி-5)

# தற்கொலை குண்டுத் தாக்குதலில் 21 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சுமார் 21 பேர் கொல்லப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த தாக்குதல் சம்பவமானது நகர மையத்தில் அமைந்துள்ள வங்கியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாகவும் இந்தத் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தான் அரசு ஊழியர்கள் சம்பளம் வாங்குவதற்கு வரிசையில் நின்று கொண்டிருந்த நிலையில் பயங்கரவாதி ஒருவர் தனது உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

இதன்போது உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்த சுமார் 50 பேர் மிர்வாய்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலியாவில் கடும் குளிரால் லியன் விலங்குகள் உயிரிழப்பு

## ச செஞ்சிலுவை சம்மேளனம்



(லூர்)

லியா நாடான மொங்கோலியாவில் கடுமையான காரணமாக ஐந்து மில்லியன் விலங்குகள் உயிரி சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் தெரிவித்



மொங்கோலியா மிகவும் கடுமையான குளிரில் சிக்குப்பட்டு உறைந்துபோயுள்ளதுடன் 4.7 மில்லியன் விலங்குகள் உயிரிழந்துள்ளதாகவும் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உணவு விநியோகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மொங்கோலியாவில் வெப்பநிலை வீழ்ச்சியடைந்து கடும் பனி காணப்படுகின்றது .

மேய்ச்சல் நிலங்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன. கால்நடைகள் உணவிற்காக அலைகின்றன என செஞ்சிலுவை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மொங்கோலியாவில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நாடோடிகள் மற்றும் கால்நடை மேய்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் உணவுக்காகவும் சந்தைகளில் விற்பனை செய்வதற்காகவும் கால்நடைகளை நம்பியுள்ளனர்.

தங்கள் வாழ்க்கைக்காக கால்நடைகளை முற்றாக நம்பியுள்ள மக்கள் கடும் குளிர் காலம் காரணமாக ஒரு சில மாதங்களில் ஆதரவற்றவர்களாக மாறிவிட்டனர் என சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய இயக்குநர் அலெக்ஸாண்டர் தெரிவித்துள்ளார்.

கால்நடை மேய்ச்சலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களில் 2250இற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் கால்நடைகளில் 70 வீதத்திற்கும் அதிகமானவற்றை இழந்துவிட்டதாகவும் 7000 குடும்பங்கள் போதிய உணவை பெற முடியாத நிலையில் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் கடும் குளிரான இந்த காலநிலை நீடிக்கலாம் என்ற அச்சம் வெளியாகியுள்ளது. (நி-5)

# டில்லி முதலமைச்சர் ஊழல் வழக்கில் கைது

(டில்லி)




மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமுலாக்கத்துறை கைது செய்தது.

இதனால், டில்லியில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

டில்லியில் உள்ள அரவிந்த் கெஜ்ரிவால் இல்லத்தில் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சுமார் மூன்று மணி நேரம் விசாரணையில் ஈடுபட்டனர். அதன் பின், அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

இதனிடையே, ஆம் ஆத்மி நிர்வாகிகளும் தொண்டர்களும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி வருவதால் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய முதலமைச்சர் ஒருவர் பதவியில் இருக்கும்போதே கைது செய்யப்படுவது இதுவே முதல்முறை என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# அருணாச்சல பிரதேசத்தை இந்திய நிலப்பரப்பாக அங்கீகரித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)



சர்ச்சைக்குள்ளாகியுள்ள அருணாச்சல பிரதேசத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக இந்தியப் பிரதமர் மோடி அருணாச்சலப் பிரதேசத்திற்கு பயணித்ததை அடுத்து சீனா கடுமையான கண்டனங்களை வெளியிட்டிருந்தது.

குறித்த பிரதேசத்தை 'தெற்கு திபெத்' என உரிமை கொண்டாடி வரும் சீனா இப்பகுதிக்கு 'ஸாங்னான்' எனப் பெயர் சூட்டி அழைத்து வருகிறது.

அத்தோடு இந்தியத் தலைவர்கள் இந்தப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொள்வதற்கு சீனா கண்டனங்களை தெரிவித்து வருகிறது.

சீனா இவ்வாறு உரிமை கோரிவரும் நிலையில், அருணாச்சல பிரதேசத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்காவின் வெளியுறவுத் துறை முதன்மை துணை செய்தி தொடர்பாளர் வேதாந்த் பட்டேல் கூறுகையில், அருணாச்சல பிரதேசத்தை இந்திய நிலப்பரப்பாக அங்கீகரிக்கிறோம்.

ஊடுருவல் அல்லது அபகரித்தல் இராணுவம் மூலமாக உண்மையான எல்லைக்கோட்டை தாண்டி தங்களது நிலப்பரப்பு என ஒருதலைப்பட்சமாக உரிமை கோருவதற்கான எந்தவொரு முயற்சியையும் அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது என தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சேவையில் ஈடுபடாத பேருந்துக்கு பணம் செலுத்தி ஏமாந்த நபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்காக இணையத்தளமொன்றின் ஊடாக பேருந்தை முன்பதிவு செய்தவர் பணத்தை இழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பழையை சேர்ந்த நபரொருவர் கொழும்பில் நடைபெறும் போட்டிப் பரீட்சையொன்றுக்கு செல்வதற்காக சில தினங்களுக்கு முன்னர் பேருந்து முற்பதிவு செய்யும் இணையத்தளமொன்றில் 4600 ரூபாய் பணத்தை வங்கி அட்டை ஊடாக செலுத்தி இரண்டு ஆசனங்களை முற்பதிவு செய்துள்ளார்.

முற்பதிவு செய்தவருக்கு மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் ஊடாக பதிவு செய்ததை உறுதிப்படுத்தும் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

இதனை நம்பி கொழும்பு செல்வதற்காக நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் தெல்லிப்பழை சந்தியில் பேருந்துக்காக காத்திருந்துள்ளார். நீண்ட நேரமாகியும் பேருந்து வராத நிலையில் இணையத்தில் உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முயற்சித்தும் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் தனியார் பேருந்துகள் தரித்து நிற்கும் யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்திற்கு சென்று பார்த்த போதும் முற்பதிவு செய்த பேருந்தைக் காணவில்லை.


தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த குறித்த நபர் வேறொரு பேருந்து மூலம் கொழும்புக்கான பயணத்தை தொடர்ந்தார். இதன் போது குறித்த பேருந்து நடத்துனரிடம் விசாரித்த போதே தான் முற்பதிவு செய்த பெயரில் பேருந்தே சேவையில் ஈடுபடுவதில்லை என்பதை அறிந்து தான் ஏமாறியதை உணர்ந்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக வங்கி அட்டைகளை பயன்படுத்தி பல வகையில் மோசடி இடம்பெறும் நிலையில் சேவையில் ஈடுபடாத பேருந்துக்கு கட்டணம் அறவிடும் மோசடியும் அரங்கேறுகிறது. (நி-5-33)

# புற்றுநோய்களை உண்டாக்கும் அழகுசாதனப் பொருட்கள் இலங்கையில்

(கொழும்பு)

பெண்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அழகு சாதனை பொருட்கள் இலங்கையின் பல பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.



புற்றுநோயை உண்டாக்கும் கிரீம்கள் உள்ளிட்ட அழகு சாதணப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் அஜித ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

பெண்கள் தங்களை அழகுபடுத்தும் நோக்கில் ஆபத்தான கிரீம்களை பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'Chandni' எனும் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்படும் கிரீம்களில் ஈயம் அதிகளவு சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பாதரசத்தின் அளவும் அதிகம், கென்டியம் எனும் மூலப்பொருளும் அதிகளவு சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தடைசெய்யப்பட்ட கிரீம்கள் உள்ளிட்ட அழகு சாதனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அவை இலங்கை சந்தையில் சூட்சமமாக விற்பனை செய்யப்படுகின்றன. (நி-5)

# பொதுத் தேர்தலைத்தான் முதலில் நடத்த வேண்டும்

## மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நாம் எந்தவொரு தேர்தலுக்கும் தயார். எனினும், பொதுத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்றுதான் பசில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். இது நியாயமான கோரிக்கை என்றே நாம் கருதுகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# குறுஞ்செய்திகளை நம்பி ஏமாறாதீர்கள் வாடிக்கையாளர்களை எச்சரித்த மக்கள் வங்கி

(கொழும்பு)

தமது வாடிக்கையாளர்களை அவதானமாக இருக்குமாறு மக்கள் வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மக்கள் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட விபரங்களைப் பெறும் வகையில் மோசடியான குறும் செய்திகள் தொலைபேசிகளில் பரப்பப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான போலியான குறுஞ்செய்திகளை நம்பி வாடிக்கையாளர்கள் தமது தனிப்பட்ட விவரங்கள், வங்கி கணக்கு விவரங்கள், கிரெடிட் அல்லது டெபிட் காட் விவரங்கள் அல்லது OTP எண்களை வழங்க

# இன்று ஒரு தகவல் 73



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கண்

"நான் எதுக்குமே கண் கலங்கினதில்லை"! என்று பெருமையா சொல்லிக்கிட்டு இருந்தார் ஒருத்தர் ! அப்பிடிப்பட்டவரே ஒரு நாள் கண்கலங்கிக்கிட்டு இருந்தார். எனக்கு ஆச்சரியம்! பக்கத்திலே போய் ஆறுதலாக "என்னாச்சு" என்று கேட்டேன். கண்ணிலே தூசு விழுந்து விட்டது என்றார்.

துயரத்தினாலே கலங்காதவங்க கூட தூசு விழுந்தால் கலங்கித்தான் ஆக வேண்டும். கண்ணிலே தூசு விழுந்தால் என்ன நடக்கும் தெரியுமா? உடனே ஒரு உறுத்தல் ஏற்படுகிறது! கண்ணால் இந்த உறுத்தலை பொறுக்க முடியவில்லை. உடனே மூளையிடம் முறையிடுகிறது. உடனே மூளையும் ஒரு உத்தரவு போடுகிறது. அந்த உத்தரவுப்படி கண்ணிலே இருக்கிற நீர் சுரப்பிகள் உடனடியாக வேலை செய்கிறது. கண்ணீர் வெள்ளமாக பெருகுகிறது. அந்த வெள்ளத்திலே தூசி அடித்துக் கொண்டு வந்து வெளியிலே தள்ளிவிடும்.

இது இயற்கை கொடுத்துள்ள பாதுகாப்பு. சில சமயத்திலே கண்ணில் விழுகின்ற தூசி வசதியாக சில இடத்திலே போய் ஒட்டிக் கொள்கின்றது. என்ன தான் கண்ணீர் வெள்ளமாக பெருகினாலும் தூசு அசைந்து கொடுப்பதில்லை. இது கண்ணிலே இருக்கின்ற வரைக்கும் தொல்லை தான். உடனடியாக மருத்துவரிடம் போறது நல்லது தான் அவங்க தூசை எடுத்து மருந்து போட்டு விடுவார்கள். கண்ணில உறுத்தல் வந்துவிட்டால் உனே பல பேர் என்ன செய்கி றோம்? பையிலே இருக்கிற கைக்குட்டையை எடுக்க வேண்டியது அதை பந்து மாதிரி உருட்ட வேண்டியது வாய் வைத்து ஊத வேண்டியது. கைக்குட்டை கொஞ்சம் சூடா ஆகுதா? உடனே அதை கண்ணிலே வைத்து அழுத்த வேண்டியது. ஒத்தடம் குடுக்கிறதா நினைப்பு! இதனாலே என்ன ஆகுது தெரியுமா?

கைக்குட்டையிலே இருக்கிற அழுக்கு, வாயில் இருக்கிற நுண்ணுயிர் எல்லாம் சேர்ந்து கண்ணுக்குள்ளே போய் விடும். இது எல்லாம் ரொம்ப தப்பு என்று டொக்டர்கள் சொல்கிறார்கள். இன்னொரு வேடிக்கை தெரியுமா? கண்ணிலே தூசு விழுந்து விட்டது என்று ஒருத்தரிடம் இன்னொருத்தர் சொல்லுவார். உடனே அவர் எல்லாம் தெரிந்தவர் மாதிரி இவருடைய கண்ணை தன்னுடைய விரலாலே விரித்து பிடிப்பார். வாயாலே வேகமா ஊதுவார் தூசை விரட்டு கிறாராம்!

கண்ணிலே உள்ள தூசு போகாது. இவர் வாயிலே உள்ள கிருமிகள்தான் அவர் கண்ணுக்கு போய்ச் சேரும். இன்னும் சிலபேர் தாராளமாக யோசனைகள் எல்லாம் சொல்லுவாங்க. வெண்ணெய் நந்தியாவட்டைச்சாறு விளக்கெண்ணெய் கோழிக்கால் இரத்தம் இதுபோல் எதையாவது கண்ணிலே விடுங்க என்று சொல்லி விட்டு அவங்கபாட்டுக்குப் போயிடுவாங்க. வெண்ணெய்ல கொழுப்பு அமிலம் இருக்கு. நந்தியாவட்டை சாற்றிலே இருந்து காளான் வந்து தொற்றிக்கும்! காளான் தொற்று சில சமயம் கண்ணையே அழிச்சிடும். விளக்கு எண்ணெயிலே உள்ள கலப்படப்பொருள் கண்ணை உறுத்தி சிவப்பாக வைத்துவிடும். இதுவே இப்படி என்றால் கோழிக்கால் ரத்தம் எப்படி?

இன்னும் சில பேர் கிராமத்திலே உண்டு பரம்ரரை வைத்தியர் என்ற பெயரில் இவங்க எப்பிடி தெரியுமா?அடுத்தவங்க கண்ணில் இருக்கிற தூசை எடுக்கிறதுக்கு இவங்க உபயோகபடுத்திற கருவி எது தெரியுமோ?இவங்களோட நாக்கு!

சில பேர் இதுக்காகவே ஒரு கம்பி வளையும் வைத்திருப்பாங்க ஒருசின்ன தூசு பல பேருக்கு பார்வையேபோகிற அளவிற்கு பண்ணி விட்டது. அதனாலே தான் இவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. உங்க கண் நல்ல இருக்கனும் என்றா கண்ணிலே எதையும் போடாதீங்க. கண்ணை அழகு படுத்துகிறேன் என்று சொல்லிக்கிட்டு எதுவும் செய்ய வேண்டாம்.ஒரே குப்பியிலே இருக்கிற மையை பல பேர் பயன்படுத்தும் போது ரொம்ப நுட்பமான சில கண் நோய்கள் ஒருத்தர்கிட்டேயிருந்து இன்னொருத்தரிற்கு போய் விடுகிறது.

புருவம் கண்ணுக்கு பாதுகாப்பு அதைபோய் எடுத்திட்டு மை தீட்டிக்கிறது இப்ப ஒரு நாகரீகம் பாலாபிஷேகம்,எண்ணெய் அபிஷேகம், பூச்சாறு அபிஷேகம் இது எல்லாம் உங்க கண்ணக்கு வேணாம்.கண் பாக்கிறதுக்கு தான் இருக்கிறது அதுக்காக அதை பாட படுத்தாதீங்க ! அளவா உபயோகப்படுத்துங்க சின்ன எழுத்தை படிக்கிறதுக்காக ,ஓடுற வண்டியிலே படிக்கிறது வெளிச்சம் குறைவா உள்ள இடத்திலே படிக்கிறது இது எல்லாம் கண்ணுக்கு களைப்பை உண்டாக்கும் இரவில் கஷ்ரப்பட்டு கண் முழித்துபடிக்கிறது தூக்கம் வராம இருக்கிறதுக்கு அப்பப்ப கண்ணை கழுவி விட்டு படிக்கிறது தேநீர் அருந்தி தூக்கத்தை விரட்டுறது இப்படியெல்லாம் செஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 இற்குப் பின் யாழ்ப்பாண நகர்



பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

### மத்திய வியாபார வலயம்

யாழ்ப்பாண நகரின் மத்திய வியாபார வலயத்தின் நிலப்பயன்பாடு, உருவவியல், கட்டமைப்பு பெரியளவில் வளர்ச்சி பெற்றதாகச் சொல்வதற்கில்லை. எனினும் இன்று பல்வகை வர்த்தக செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. காங்கேசன்துறை வீதி அகலமாக்கப்பட்டும் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டும் புதுப்பொலிவு பெற்று இருப்பதுடன், போக்குவரத்து நெரிசல் இல்லாது இருக்கின்றது. எனினும் இவ்வீதி வர்த்தக செயற்பாட்டில் பெரும் முன்னேற்றம் கண்டதாக இல்லை. கஸ்தூரியார் வீதி நகரின் மத்தியில் இருந்து நாவலர்வீதிச்சந்தி வரை இரு பக்கமும் நகைக்கடைகளைக் கொண்டு காணப்படுகின்றது. யுத்த காலத்தில் இருந்து நகைக்கடைகள் விரிவடைந்து நகரின் செயற்பாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மின்சார நிலைய வீதியில் புடவைக் கடைகளின் செயற்பாடுகள் பெருமளவு விரிவடைந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் புலம் பெயர்ந்த எம்மவர்கள் இங்கு வரும் பொழுது நகரில் புடவைகளை வாங்கிக்கொண்டு போவதும் உறவினர்களுக்கு வாங்கிக் கொடுப்பதும் ஆகும்.


யாழ்ப்பாண நகரின் வர்த்தகச் செயற்பாடு விரிவடையாததற்கு முக்கிய காரணங்கள் இரண்டு (1)நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், சங்கானை, கொடிகாமம், மானிப்பாய் போன்ற குடாநாட்டு நகரங்களும், கிளிநொச்சியும் பெரும் வளர்ச்சி பெற்றதும், (2) கொழும்பிலிருந்து நேரடியாக வடபகுதி நகரங்கள், கிராமங்களுக்குப் பொருட்கள் விநியோகம் இடம் பெறுவதும் முக்கிய காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. மேலும் நகரமையப்பகுதிக்கு வெளியில் சுப்பர்மார்க்கட் பல நிறுவப்பட்டுள்ளதால் மக்கள் தங்களின் பொருட்தேவைகளுக்கு நகர மையத்திற்கு வரும் தேவைகள் குறைவடைந்து விட்டன.

### சுற்றுலாத்துறை

நகரின் வளர்ச்சியில் இன்று சுற்றுலாத்துறை வளர்ச்சி முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றது. வெளிநாட்டவர்கள், தென்னிலங்கையர், புலம் பெயர்ந்த எமது உறவுகள் என மூன்று வகை சுற்றுலாவாசிகள் நகரத்திற்குப் பெரும் எண்ணிக்கையில் வருகின்றனர். இவர்களின் வருகை நகரப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதாக இருக்கின்றது. பெரும் எண்ணிக்கையான தரமான ஹோட்டல்கள் குறுகிய காலத்தில் நகரில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் முக்கியமானவை பின்வருமாறு – றில்கோ, யு.எஸ்.கெஸ்ட் கவுஸ், திண்ணை, வலம்புரி, ஜெற்விங் நோத்கேட், கிறீன் கிறாஸ், Ytprp, P.J.Guest House.பஸ்ரியன்,Jaffna Heritage, AB.Vilas, FOX, சுபாஸ் ஹோட்டல், யாழ் ரவுண் இன் என பெயர்ப் பட்டியல் நீண்டு செல்லும். பெரிய ஹோட்டல்களைத் தவிர பல்வேறுவகை சிறிய பெரிய தங்குமிடங்கள் நகரில் வளர்ச்சி பெற்றுள்ளன. சுண்டிக்குளிப் பகுதியில் பல விடுதிகள் செறிவாக உள்ளன. சுற்றுலாத்துறை வளர்ச்சி நகரின் இரவு வாழ்க்கை வளர்ச்சிபெற சிறியளவில் வழிவகுத்துள்ளது. நகரவாசிகள் பல்வேறு குடும்பக் கொண்டாட்டங்கள், ஒன்றுகூடல் போன்ற நிகழ்வுகளை தரமான ஹோட்டல்களில் நடத்துவது அதிகரித்து வருவதையும் காணலாம். ஹோட்டல் துறையினர் தமக்குத் தேவையான ஆளணியினர்களைப் பெறமுடியாதுள்ளதெனக் குறைப்படுகின்றனர். சுற்றுலாத்துறையினதும், ஹோட்டல்களினதும் வளர்ச்சி உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கவும் சந்தைப்படுத்தவும் உதவியாக அமைந்து வருகின்றது.

### மருத்துவத்துறை

யாழ்ப்பாண நகர செயற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும், தனியார் மருத்துவமனைகளும், வைத்திய பரிசோதனை நிலையங்களும் மருந்தகங்களும் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 125 இற்கு மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களது சேவைகள் தனியார் மருத்துவமனைகளுக்கும் கிடைக்கின்றன. போதனா மருத்துவமனையில் பல்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகள் இருக்கின்றதுடன் 1000 இற்கும் மேற்பட்ட படுக்கைகளும் உள்ளன. மேலும் பெரிய வெளிநோயாளர் பிரிவையும் இது கொண்டுள்ளதுடன் மருத்துவ பீடத்திற்குரிய நோயாளர் விடுதிகளும் இருப்பது முக்கியமானதாகும். மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், தாதிகள் மற்றும் இணைந்த மருத்துவ மாணவர்கள் பயிலும் மருத்துவமனையாக இது இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மாவட்ட மக்கள் மாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதியில் வாழும் மக்கள் தமது உயர்மட்ட மருத்துவச் சேவையைப் பெற யாழ்ப்பாணம் வருகின்றனர். நகரில் கிடைக்கும் உயர் மருத்துவ வசதிகள், மொழிப்பிரச்சினையற்ற நிலைமை, இலகுவான தங்குமிட வசதிகள் என்பன பிற இடத்து நோயாளர்களை யாழ்ப்பாண நகரம் நோக்கி ஈர்க்கின்றன.



யுத்தத்திற்குப் பின்னர் தரமான தனியார் மருத்துவமனைகள் பல நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் பலாலி வீதியில் அமைந்திருக்கும் நொதேன் சென்றல் மருத்துவமனை, யாழ்.கொஸ்பிற்றல் வீனஸ் மருத்துவமனை மற்றும் குருநகரில் அமைந்திருக்கும் கோல்குறஸ் போன்றவற்றில் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் தங்கியிருந்து சிகிச்சைபெறும் வசதியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் கோலி குறஸ் மருத்துவமனை புதுப்பொலிவு பெற்றுள்ளது. மேலும் மதர் கெயார், சன்றைஸ், சம்பந்தன் மருத்துவ நிலையங்களில் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு. கண் வைத்தியத் துறையில் எஸ். ரி.எஸ் மருத்துவமனையும் விசன் கெயார் மருத்துவ நிலையமும் குறிப்பிடத்தக்க சிறந்த சேவையை ஆற்றிவருகின்றன. மேலும் தனியார் துறையில் நவீன வசதிகள் கொண்ட பல்வைத்திய நிலையங்களும் வளர்ச்சி கண்டுள்ளன.

இதற்கப்பால் நகரில் மேலைத்தேய மற்றும் சித்த வைத்திய நிலையங்களும் பரவலாக இருப்பது நகர மக்களுக்கும் அயற் கிராம மக்களுக்கும் வைத்திய வசதிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது. மிகவும் சிக்கலான மிக உயர்மட்ட வைத்திய சேவைகளுக்கு மாத்திரமே மக்கள் கொழும்பு செல்ல வேண்டியுள்ளது. 1980 இலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பெருந்தொகையான பணம் கொழும்பில் வைத்திய சேவைகளைப் பெறுவதற்கு மாவட்டத்திற்கு வெளியே சென்றது. ஆனால் இன்று யாழ்ப்பாண நகரில் ஏற்பட்ட வைத்திய வசதியால் பெருமளவு பணம் பிற பிரதேசத்து மக்களால் நகருக்குக் கொண்டுவரப்படுகின்றது.

### கல்வித்துறை

இன்று எல்லா மாவட்டங்களிலும் தரமான பாடசாலைகள் இருப்பதாலும் பல்கலைக்கழக அனுமதியில் மாவட்டக் கோட்டாமுறை அமுலில் இருப்பதாலும் வெளி மாவட்டப் பிள்ளைகள் 1970 இற்கு முன்னர் போல் யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளில் சேர்வதில்லை. நகரப் பிரபல கல்லூரிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கிராமத்துப் பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். தரமான விஞ்ஞானக்கல்வி எல்லா மாவட்டங்களிலும் கிடைப்பதில்லை. இதனால் குறிப்பாக க.பொ.த உ/த பரீட்சை விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் தங்களது விஞ்ஞானப் பெறுபேற்றை அதிகரிக்க யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களையே நம்பியிருக்கின்றார்கள். இத்தனியார் கல்வி நிலையங்கள் பெரும் எண்ணிக்கையான பிற மாவட்ட மாணவர்களை ஈர்க்கின்றன. இம்மாணவர்களுக்கு நேரடியாகவும் இணைய வழியாகவும் விஞ்ஞானக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டினால் நகரிற்கு பணம் உள்வருகின்றதுடன் குறிப்பாக வார இறுதி நாட்களில் மாணவர் பிரசன்னத்தால் நகரம் துடிப்பாகச் செயற்படுகின்றது.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் உயர் தொழில்நுட்பக் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் தென்னிலங்கை மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கல்வி கற்கின்றனர். இதனால் நகரின் பொருளாதாரம் குறிப்பாக திருநெல்வேலிப்பகுதி சிறு நன்மை பெற்றுவருவதையும், இப்பகுதியின் பண்பாடு பல்தன்மை கொண்டதாக மாறிவருவதையும் காணலாம். மேலும் நகரில் இன்று SLIIT Northern UNI, ICBT, BCAS, IIT மற்றும் இந்திய பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நிலையங்கள் உருவாகியுள்ளன. தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதும் மூன்றாம் நிலைக் கல்விச் செயற்பாட்டினால் நகரின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

### நகரக் கட்டுமாணங்கள்

யுத்தத்தால் நகரின் முக்கிய கட்டடங்கள் அழிவுக்குட்பட்டன. நூல் நிலையம், மாநகரசபை, வீரசிங்கம் மண்டபம், கூட்டுறவுக் கட்டடம் என இவை நீண்டு செல்லும். இன்று நூல் நிலையம், வீரசிங்கம் மண்டபம், கூட்டுறவுக் கட்டடம், மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியன புதுப்பொலிவு பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியன நெகோட் திட்டத்தால் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றன. நகரிலுள்ள ஏனைய பெரிய சிறிய பாடசாலைகளும் புதுக்கட்டடங்களைப் பெற்று சிறப்பாக இயங்குகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி போன்றனவும் புதிய கட்டடங்களைக் கொண்டு விளங்குகின்றன.

இந்திய கலாசார மையம், துரையப்பா விளையாட்டு அரங்கம், யாழ்ப்பாணம் ஆளுநர் மாளிகை, யாழ்ப்பாண/நல்லூர் பிரதேச செயலகங்கள் நகரின் முக்கிய நிலத்தடையாளங்களாக இருக்கின்றன. (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 437





இருக்க வேண்டிய இடம் அவர் அருகிலே தான். இலங்கை அரசு எனக்கு என்னத்திற்கு? அல்லது இந்த உயிர்தான் என்னத்திற்கு? இனி யோசனை ஒன்றுமே தேவையில்லை. என்னைத் தடை செய்வதற்கு யாரும் முயலவேண்டாம்! என்று இளவரசர் கம்பீரமாகக் கூறினார். பிறகு சற்றுத் தூரத்தில் தூணில் சாய்ந்து கொண்டு தம்மைக் கண்கொ ட்டாமல் பார்த்துக் கொண் டிருந்த பூங்குழலியின் மீது அவர் கண்கள் சென்றன.

"சமுத்திரகுமாரி! சற்று இப்படி அருகில் வா!" என்றார். பூங்குழலி நெருங்கி வந்தாள். பெண்ணே! நீ கொண்டு வந்த செய்தியின் மூலம் எனக்குப் பெரிய உதவி செய்தாய். இன்னும் ஓர் உபகாரம் எனக்கு நீ செய்ய வேண்டும். செய்வாயா? என்று கேட்டார்.

அடடா! இது என்ன? இந்த ஏழைப் படகுக்காரியிடமா இவர் உதவி கோருகிறார்? இவருக்குக் குற்றேவல் செய்யும் பாக்கியத்தை நாடிவந்தேன் இவர் என்னிடம் உதவி வேண்டும் என்று யாசிக்கிறாரே! கடவுளிடம் வரம் கேட்க வந்தேன் கடவுள் தம் திருக்கரங்களை நீட்டி என்னிடம் 'பிச்சை போடு' என்று கேட்கிறாரே?' இவ்வாறு மனத்தில் எண்ணி "இளவரசே! தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்!" என்றாள் பூங்குழலி.

சமுத்திரகுமாரி! என்னைத் தேடிக்கொண்டு இரண்டு மரக்கலங்கள் தொண்டைமான் ஆற்று முகத்துவாரத்தின் அருகில் காத்திருக்கின்றன என்று சொன்னாய் அல்லவா? அந்த இடத்துக்கு நான் அதி சீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டும். எனக்கு வழி காட்டி அழைத்துக் கொண்டு போவாயா?"

பெண்ணே! முடியாது என்று சொல்! என்பதாக ஒரு குரல் கர்ஜித்தது.. அது சேனாதிபதியின் குரல்தான் என்பதைப் பூங்குழலி உணர்ந்தாள்.

இத்தனை நேரமும் ஏதோ ஒரு சொப்பன லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவளுக்கு இப்போது தான் தன் நெருக்கடியான நிலைமை தெரிந்தது. எந்த அபாயத்திலிருந்து இளவரசரைத் தப்புவிக்கலாம் என்ற ஆசையுடன் இவள் அவசர அவசரமாக ஓடி வந்தாளோ அந்த அபாயத்தின் வாயிலிலேயே கொண்டு சேர்க்கும்படி இளவரசர் இப்போது தன்னைக் கேட்டுக்கொள்கிறார்!

"பெண்ணே! 'முடியாது' என்று சொல்!" சேனாதிபதியின் இந்தக் கட்டளையின் பொருள் அவளுக்கு இப்போது புலனாயிற்று. நாலா புறத்திலிருந்தும் ஆயிரம் குரல்கள் அதே கட்டளை யை அவளுக்கு இட்டன. மரங்கள் அவ்வாறு முழங்கின் மண்டபத்தின் தூண்கள் அவ்விதம் அலறின மரக்கிளைகளின் மேலிருந்து பறவைகள் கதறின.

ஆனால் அந்த பேதைப் பெண்ணின் இதயத்தின் உள்ளே மெல்லிய குரல் கேட்டது.

பூங்குழலி! இதோ உன் அதிர்ஷ்டம்! இளவரசருக்கு வழி காட்டி அழைத்துப்போவாயானால் அவருடன் இரண்டு தினங்கள் கழிக்கலாம். அவர் அருகில் நீ இருக்கலாம்.

(தொடரும்)

மதுராந்தகத் தேவனுக்குப் பட்டம் கட்டுவது பற்றிச் சக்கரவர்த்தியே யோசி த்து வருவதாகத் தெரிகி றது. ஆகையால் சக்கரவர்த் தியின் கட்டளையென்று கருதித் தாங்கள் தஞ்சைக்குப் போவதற்கு இது தருணமல்ல

"சேனாதிபதி! தாங்கள் கூறிய செய்திகள் எனக்கு மிக்க வியப்பை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆயினும் அச்செய்திகளில் நான் செய்த முடிவுதான் உறுதிப்படுகிறது. என் தந்தையை அவ்வளவு பயங்கரமான அபாயங்கள் சூழ்ந்திருக்கும்போது நான்



# சிறுவர் அரங்கம்

## அழகை விட அறிவே முக்கியம்



தேவகோட்டை என்னும் ஊரில் பரத் என்பவன் வசித்து வந்தான். அவன் அழகன் ஆனால் சரியான முட்டாள். எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்யமாட்டான்.

அவன் முழு முட்டாள் என்று தெரியாமல் அவனது அழகில் மயங்கி திருமணம் செய்து கொண்டாள் மாலதி. அவனின் முட்டாள் தனத்தால் ஏராளமான தொல்லைகளையும் அனுபவித்தாள்.

எப்படியாவது அவனை திருத்த வேண்டும் என்று மனதிற்குள் எண்ணினாள் மாலதி.

அந்த ஊருக்கு புகழ் பெற்ற கூத்துக் குழு ஒன்று வருவதாகவும் அவர்கள் இராமாயண நாடகம் நடத்துவதாகவும் அறிவித்திருந்தனர். அந்த நாடகத்தை பார்த்தாவது கணவன் திருந்துவான் என நினைத்தாள்.

அதனால் அவனை நாடகம் பார்க்க அனுப்பி வைத்தாள்.

அவனுக்கு நாடகம் பார்க்க மனமில்லை. அதனால் ஒரு மூலையில் சென்று நன்றாக தூங்கினான்.

கூடியிருந்த கூட்டத்திற்கு பணக்காரர் ஒருவர் இனிப்புகளைக் கொடுத்தார். நன்றாக தூங்கிக் கொண்டிருந்த பரத்தின் வாயில் இனிப்பைப் போட்டார்.

அதை சுவைத்து சாப்பிட்டான் பரத். மறுநாள் காலையில் வீட்டிற்கு திரும்பினான் பரத். என்னங்க நாடகம் எப்படி இருந்தது என்று கேட்டாள் மாலதி.

நாடகம் ரொம்ப இனிப்பா இருந்தது என்றான் பரத். நாடகம் ரொம்ப பிடித்து விட்டது போலிருக்கிறது. அதனால் தான் இனிப்பாக இருக்கிறது என்று சொல்கிறான் என நினைத்தாள் மாலதி.

அன்று இரவும் அவனை நாடகம் பார்க்க அனுப்பி விட்டாள். அன்றும் ஓரிடம் தேடிப்போய் படுத்துத் தூங்கினான். ஒரு சிறுவன் அவன் மேல் ஏறி அமர்ந்து நாடகம் பார்த்துக் கொண்டிருந்தான். தூக்கத்தில் இருந்த பரத் அதை அறியவில்லை.

நாடகம் முடிந்ததும் எல்லோரும் புறப்பட்டனர். பரத்திற்கு உடலெல்லாம் வலித்தது. வீட்டிற்கு சென்றான்.நாடகம் எப்படி இருந்தது? என்று கேட்டாள் மாலதி.

மிகவும் கனமாக இருந்தது என்றான். ராமன் - சீதைக்கு ஏற்பட்ட துன்பத்தையே கனம் என்று சொல்கிறான் போலும் என நினைத்தாள் மாலதி. அன்று இரவும், நாடகம் பார்க்க அனுப்பி வைத்தாள். அன்றும் ஒரு ஓரமாய் படுத்துத் தூங்கினான் பரத்.

ஒரு நாய் அவன் முகத்திற்கு நேராக சிறுநீர் கழித்தது. திடுக்கிட்டு விழித்தான். கூத்து முடிந்து எல்லாரும் சென்று விட்டனர். தன் முகத்தை துடைத்தபடியே வீடு வந்து சேர்ந்தான். மனைவி ஓடி வந்தாள்.

என்னங்க இன்றைக்கு நாடகம் எப்படி இருந்தது? என்று கேட்டாள்

ஒரே உவர்ப்பாக இருந்தது. என்று சொல்லி தூ... தூ... என்று துப்பினான்.

அப்போது தான், மாலதிக்கு உறைத்தது. இவன் நாடகம் பார்க்கவில்லை வேறு எதுவோ நடந்திருக்கிறது என்றுநினைத்துத் அவனை விசாரித்தாள். அவனும் உண்மையைக் கூறினான்.

இந்த முட்டாளை எத்தனை ஜென்மம் ஆனாலும் திருத்த முடியாது என்பதை உணர்ந்து நொந்து போனாள் மாலதி.அழகு அழகு என்று அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அறிவுக்கு முக்கியத்துவம் கொடுங்க குழந்தைகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இரு வகை நூல் இருக்கும். நன்மை, தீமையே அவை.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் பிரதேசங்களில் முகாமைத்துவப் பலயீனம்

மலையகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் அவர்களின் எழுச்சியையும் நாம் போற்றித்தானாக வேண்டும்.

அந்தளவுக்கு அவர்கள் உன்னதமான வளர்ச்சியடைந்துள்ளனர்.

ஆம், தென்பகுதியில் உள்ள பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவங்களிலும் ஐந்து நட்சத்திர விருந்தினர் விடுதிகளிலும் மலையகத் தமிழ் இளைஞர்களே பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு அவர்கள் பணியாற்றுவதற்குக் காரணம் அவர்களிடம் இருக்கக்கூடிய வேலை மீதான பற்றுதல், பண்பான பழக்க வழக்கங்கள், எதையும் நிதானமாகக் கையாளும் கெட்டித்தனம், மும்மொழி ஆற்றல், சுறுசுறுப்பு, நீண்டநேரம் வேலைசெய்யக் கூடிய மனநிலை போன்றவையாகும்.

இதைப் பார்க்கும்போது எங்கள் மலையகத் தமிழ்ச் சகோதரர்களையிட்டு நாம் பெருமையடைய முடியும்.

அதேநேரம் எங்கள் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய எங்கள் இளைஞர்களைப் பார்க்கும்போது மிகச் சிறிய அளவிலான இளைஞர்களே பொறுப்போடும் கண்ணியத்தோடும் விசுவாசத்தோடும் பணியாற்றுகின்றனர்.

மற்றும்படி பலரிடம் முகாமைத்துவப் பண்புகள் அறவே இல்லை எனலாம்.

உண்மை. எங்கள் தமிழர் பிரதேசத்திலுள்ள அரச, தனியார் நிறுவனங்கள் பலவற்றைப் பார்க்கும்போது, அங்கு கடமையாற்றுகின்றவர்கள்; பொதுமக்கள் வந்திருந்தாலும் அதைப்பற்றி பொருட்படுத்தாமல், தங்கள் சொந்தக்கதைகளைக் கதைப்பதும் வந்திருப்பவர்களை அலட்சியம் செய்வதும் வந்திருப்பவர்கள் யாவர்? எதற்காக வந்துள்ளனர் என்பதை அறிய விருப்பமில்லாதவர்களாகவும் செயற்படுகின்றனர்.

இதுதவிர, அங்கு பணியாற்றுகின்றவர்களிடம் விசாரித்தால், அதற்கும் பொறுப்பான பதிலளிப்பு இல்லை.

ஏனோதானோ என்ற அலட்சியப் போக்கு மிகுந்திருப்பதைக் காண முடியும்.

இந்த நிலைமை எங்கள் தமிழர் பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்களில் மட்டுமல்ல, தனியார் நிறுவனங்களிலும் இந்நிலைமை மலிந்து கிடக்கிறது.

அதிலும் வர்த்தக நிறுவனங்கள் உட்பட தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் இளைஞர்களில் கணிசமானவர்கள் வீதியால் போகின்றவர்களைச் சிலேடையில் விமர்சிப்பது, சிரிப்பது, நக்கல் நளினம் செய்வது என மிகக் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

தவிர, வாடிக்கையாளர்களுக்கு மதிப்பளிப்பது, அவர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்குவது என்ற விடயத்தில் அறவே கருசனையில்லாதவர்களாக இருக்கின்றனர்.

இருந்தும் இந்த முகாமைத்துவப் பலயீனத்தை நிவர்த்திக்கும் வகையில் நிறுவன உரிமையாளர்களும் நிர்வாக இயக்குநர்களும் செயற்படுவதாக இல்லை. அவர்களைப் பொறுத்தவரை தங்கள் நிர்வாகச் செயற்பாடுகள் நடந்தால் போதுமென்பதாக உள்ளது.

பொதுவில் நிறுவன உரிமையாளர் நிறுவனத்தில் இருந்து கொண்டு அவர் இல்லை என்று கூறுகின்ற அளவிலேயே நிறுவனங்களின் முகாமையுள்ளது.

இந்த எதிர்மறைச் சிந்தனை முகாமைத்துவத்தின் எதிரி எனலாம்.

எனவே எங்கள் இளைஞர்களிடையே முகாமைத்துவத்திறனை ஏற்படுத்தி, அவர்களை ஆளுமை மிக்கவர்களாகவும் பொறுப்புடையவர்களாகவும் சமுதாயத்தை மதிக்கின்ற மனப்பக்குவமுடையவர்களாகவும் ஆக்க வேண்டும்.

# வேகமாக பரவும் பூஞ்சை தொற்று

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் பூஞ்சையால் ஏற்படும் டீனியா எனும் சருமநோய் வேகமாக பரவி வருவதாக தோல்நோய் தொடர்பான விசேட வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.**

பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் இந்த நோய் அதிகம் பரவி வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தோல் நோய் விசேட வைத்திய நிபுணர் ஜானக அகரவிட்ட தெரிவித்தார்.

இந்நோயின் பிரதான அறிகுறி அரிப்பு ஆகும். மேலும், சிவப்பு புள்ளிகள் தோன்றுதல் போன்ற அறிகுறி காணப்படும்.

அதிகளவில் தோல் சுருங்கும் இடங்களிலும் வியர்வை அதிகளவில் சேரும் இடங்களிலும் அதிகளவில் இது ஏற்படும். அக்குள், பாதங்கள் மற்றும் தலையிலும் இத்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

இது தொடர்பு மூலம் பரவுகிறது. மேலும் சக ஊழியர்களிடையே பரவக்கூடும் என்று அவர் கூறினார்.

இந்த நோயை சிகிச்சைகள் மூலம் முழுமையாக குணப்படுத்த முடியும் என்பதுடன், நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

சருமத்தை தூய்மையாக வைத்திருத்தல், மற்றவர்களின் ஆடைகளை பயன்படுத்தாமல் இருத்தல், தளர்ந்த ஆடைகளை பயன்படுத்தல் போன்றவற்றின் மூலம் இந்த சரும நோய் ஏற்படுவதை தடுக்க முடியும் என விசேட வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

# பெரும்போக நெல் கொள்வனவிற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

பெரும்போக நெல் கொள்வனவிற்காக 1000 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்தது.

திறைசேரியிலிருந்து 500 மில்லியன் ரூபாவும் விவசாயிகள் நம்பிக்கை நிதியத்திலிருந்து 500 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபை குறிப்பிட்டது.

பெரும்போக நெல் கொள்வனவிற்காக வேளாண்மை மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டுள்ளன

கடந்த ஐந்து நாட்களில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 9,04,202 கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, 95 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் 7 வலயங்களிலுள்ள 241 நெல் களஞ்சியசாலைகளை நெற்கொள்வனவிற்காக தயார் நிலையில் வைத்துள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்தது.

நாடு 105 ரூபாவிற்கும் சம்பா 120 ரூபாவிற்கும் கீரி சம்பா 130 ரூபாவிற்குமாக நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. (ம-7,10)

# ஜனாதிபதித்தேர்தலில் நிற்பவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வையுங்கள்

## பரிசீலனை செய்ய தயார் என்கிறார் சிறீதரன் எம்.பி

(கண்டாளை)

ஜனாதிபதி தேர்தல்களில் நிற்பவர்கள் யாராக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வையுங்கள். அதுபற்றி பரிசீலிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமரா பெண்கள் ஒன்றியத்தினுடைய மகளிர் தின நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2009 இற்கு முன்னர் ஒவ்வொரு பெண்ணினதும் தனித்துவமான ஆளுமை எல்லாத் துறைகளிலும் சமபங்காளிகளாக வந்துள்ளதை வரலாறு நிரூபித்திருக்கின்றது.

நீண்ட நெடுங்காலமாக கடந்த எட்டு சகாப்தங்களுக்கு மேலாக உறுதி தளராது தனது கொள்கைத ளராது இனத்தினுடைய அடிப்படைக் கொள்கைகளை அடிநாதமாகக் கொண்டு தமிழினம் பயணித்து வருகின்றது

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வையுங்கள் நாங்கள் அது பற்றி பரிசீலிப்போம்.

தமிழர்கள் பொது வேட்பாளர் பற்றிய சிந்தனையையும் கொண்டுள்ளனர் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை எட்டுவதற்காக தமிழ் வாக்காளர்கள் ஒன்று திரண்டு ஒரு தமிழ் பொது வேட்பாளரை தீர்மானிக்க முனைந்தால் தென்பகுதியில் இருந்து எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரும் வெல்ல முடியாத மிகப்பெரும் சங்கடத்தை கொடுக்கும். அது பற்றிக் கூட தமிழர் தரப்பு மிக நுணுக்கமாக ஆராய்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6-315-316)

# கோப் குழுவிலிருந்து விலகப்போவதில்லை

## ரோஹித அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

கோப் குழுவின் தலைமைப் பதவியிலிருந்து விலகப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அண்மையில் கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுணவர்தனவை நியமித்தது.

இந்த நியமனத்திற்கு [illegible] கோப் குழுவின் உறுப்பினர்கள் பலர் பதவி விலகியுள்ளனர்.

இவ்வாறான ஓர் பின்னணியிலும் தாம் பதவி விலகப்போவதில்லை என ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளினால் தாம் இந்தப் பதவிக்கு தெரிவானதாகவும், அதனால் பதவி விலகும் உத்தேசமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட பொருளாதார முயற்சிகள் மற்றும் நாட்டில் நிலவும் அமைதியான சூழல் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவர் அதுல கல்கட்டிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இவ்வாண்டின் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் மார்ச் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 8,50,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் 10 மில்லியன் பயணிகள் விமான நிலையத்தைப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது இவ்வாறு அதுல கல்கட்டிய தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

28

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் இம்மொழி இலக்கியங்கள் சிறப்படைந்திருந்தன. இம் மொழியில் புகழ்பெற்ற கவிஞர் வெர்ஜில் படைத்த இனீட் என்னும் காவியம் உலகப் புகழ் வாய்ந்தது. இம் மொழியில் சிசிரோ, சேலஸ்ட், டெசிட்டஸ், செனகா போன்ற தத்துவ அறிஞர்களின் படைப்புகளும் குறிக்கத்தக்கன. கி.பி பதினெட்டாம் நூற்றாண்டுவரை இம்மொழி இலக்கியங்கள் சிறப்பு பெற்றிருந்தன.

பாரசீக மொழி ஈரான் நாட்டின் ஆட்சி மொழியாக விளங்குகிறது. இன்றைக்குப் பயன்பாட்டில் இருக்கும் கணித எண்கள் பாரசீக மொழி வழங்கிய கொடையாகும். உமர் கய்யாம் என்ற உலகப் புகழ் பெற்ற கவிஞரின் கவிதைகள் இம்மொழிக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

அரபு மொழியின் எழுத்துவடிவம் கி. மு. 328 ஆம் ஆண்டில் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. குர்ஆன் இம்மொழியில் எழுதப்பெற்றதாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டளவில் இதன் செம்மொழி இலக்கியக் காலம் தொடங்கியது. மொழியியல், வரலாறு, புவியியல் போன்ற துறை சார்ந்த பல நூல்கள் இம்மொழியில் எழுந்துள்ளன.

எபிரேயம் கி.மு. 1200 முதல் பழமை பெற்று விளங்கும் மொழியாகும். இம்மொழியில் எழுதப்பெற்ற கிறிஸ்தவ சமயச் சார்புடைய நூல்கள் இம்மொழிக்குச் செம்மொழித் தகுதியைத்தந்தன. இம்மொழியின் செம்மொழி நிலை கி. பி. 12 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இது இஸ்ரேல் நாட்டின் தேசிய மொழியாக விளங்குகின்றது.

சீன மொழியும் பண்டைய மொழியாகும். கி. மு. 600 ஆம் ஆண்டளவில் வாழ்ந்த கன்பூசீயஸ் என்பவரின் தத்துவப் படைப்புகள் இம்மொழியில் குறிக்கத்தக்கனவாகும். லாவுட்ஸ் என்பவர் தாவ் என்னும் நெறியில் நின்று பல படைப்புகளைப் படைத்தளித்தார். கன்பஸ்ரீசியஸ் கி.மு. 600 வரையுள்ள இலக்கியங்களைத் தொகுத்து நான்கு தொகுதிகளாக அளித்துள்ளார்.

ஐந்தாவதாக அமைந்த அவரின் படைப்பான தென்றலும் வாடையும் குறிக்கத்தக்க படைப்பாக விளங்குகிறது. இதனைத் தொடர்ந்து கதை பொதி பாடல்கள், இசைப்பாடல்கள் பல எழுந்தன.

இம் மொழிகளின் வளங்களைக் காணும் பொழுது அவற்றின் தொன்மையும் இலக்கியச் சிறப்பும், தொடர்ச்சியான இலக்கிய வளமையும் இம்மொழிகளுக்குச் செம்மொழி நிலையை வழங்கியுள்ளன என்பது தெரியவருகிறது. இதே வரிசையில் தமிழும் இடம் பெறுவது என்பது தகைமை உடையதே ஆகும்.

பாலி, பிராகிருதம் போன்றன இந்திய அரசால் ஏற்கப் பெற்றுள்ள உலகச் செம்மொழிகள் பட்டியலில் இல்லாத செம்மொழிகள் ஆகும். அவை பற்றிய செய்திகளும் அறிந்து கொள்ளப் பெற வேண்டியனவாகும்.

பாளி மொழி கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் பேச்சு மொழியாக அமைந்து கி.மு முதல் நூற்றாண்டில் எழுத்து வகை இலக்கிய வளமையைப் பெற்றது. பௌத்த சார்புடைய மொழியாக இது விளங்கியது. தம்மபதம், புத்தர் ஜாதகக் கதைகள், திரிபிடகம் போன்றன இம்மொழியில் எழுந்தவையாகும். தாய்லாந்து, இலங்கை, பர்மா போன்ற நாடுகளில இம்மொழி பரவியுள்ளமையால் இதனை உலகச் செம்மொழியாக அறிவிக்கக் கோரிக்கை இருந்து கொண்டுள்ளது. பிராகிருதமும் இந்தியாவின் தொன்மையான மொழிகளுள் ஒன்று.

இந்திய அரசின் வாயிலாக இந்தியச் செம்மொழிகளின் மொழி அறிஞர்கள் அவ்வப்பொழுது பாராட்டப் பெற்று வருகின்றனர். இந்நிலையில் தமிழறிஞர்களுக்கு ஊக்கமும் உணர்வும் ஏற்பட இந்திய அரசு அளித்துள்ள செம்மொழித் தகுதி உதவிடும் என்பதில் ஐயமில்லை.

உலக அளவில் தமிழை எடுத்துச் செல்லவும், தமிழில் உலக இலக்கியங்களை அறிந்து கொள்ளவும் பெருவாய்ப்பு அமைய இந்தச் செம்மொழித்தகுதி உதவிடும் என்பதில் ஐயமில்லை. இதனைத் தக்க நிலையில் எடுத்துக் கொண்டு தமிழ் நிலைக்கச் செய்ய தமிழர்கள் அனைவரும் முயல்வோம்.

**செம்மொழி பற்றி...**

"ஒருமொழியை, செம்மொழி என வகைப்படுத்தும் முறைமை, ஐரோப்பியாவில் தோன்றியது. கிரேக்கம் மற்றும் ரோமானிய இலக்கியவளத்தின் காரணமாக உலகளவில் கிரேக்கமும், இலத்தீனும் அறிஞர்களால் செம்மொழிகளாகக் கருதப்பட்டன. இலக்கிய வளமே ஒரு மொழிக்கு"செம்மொழி" எனும் தகுதியை பெற்றுத் தருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கி.பி 794 முதல் கி.பி 1185 வரையிலான காலத்திய ஜப்பானிய இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களாகக்கருதப்படுகின்றன.17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு இலக்கியங்களும் செவ்வியல் இலக்கியங்களாக கருதப்படுகின்றன. கி.பி 1660 முதல் கி.பி 1714 காலத்தின் ஆங்கில இலக்கியங்கள் செவ்வியல் தன்மைகொண்டதாய் கருதப்படுகின்றன. கம்பராமாயணமும் பெரிய புராணமும் செவ்வியல் இலக்கியங்கள் எனச் சிலர் கூறுகின்றனர்.

**செம்மொழிக்கான பதினொரு தகுதிகள்..**

ஒரு மொழியை செம்மொழி என வரையறுப்பதற்கு பின்வரும் தகுதிகள் இருத்தல் வேண்டும். அதன்1. தொன்மை 2. தனித்தன்மை (தூய்மைத் தன்மை) 3. பொதுமைப் பண்புகள் 4.நடுவுநிலைமை 5. தாய்மைத் தன்மை 6.கலை பண்பாட்டுத்தன்மை.7.தனித்து இயங்கும் தன்மை 8. இலக்கிய இலக்கண வளம் 9. கலைஇலக்கியத் தன்மை 10. உயர் சிந்தனைமற்றும் 11. மொழிக்கோட்பாடு என்பனவாகும்.

**1. தொன்மை**

செம்மொழி நிலைக்கு ஒரு மொழி ஆயிரம் ஆண்டுக் கால தொன்மைபடைத்ததாக விளங்க வேண்டும். தமிழோ ஆயிரமல்ல ஈராயிரம் ஆண்டிற்கும் மேலாகப் பேசி, எழுதி, படைத்து தனக்குள்ளே பெரும் இலக்கியச்செல்வங்களைக் கொண்டது. இதனை எவராலும் மறுக்கப்படாமல் ஏற்கத்தக்க அளவிற்கு இதன் தொன்மை சிறப்பானது. அத்துடனில்லாமல் இன்றளவும் உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களின் பேச்சுமொழியாகவும், எழுத்து மொழியாகவும், கல்விகற்கும் மொழியாகவும், படைப் புனைதனில் புதிய புதியதுறைகளிலும் நிகரற்று விளங்குவது அதன் தனிச்சிறப்பு.

**2. தனித்தன்மை**

பல்வேறு திணை நிலங்களிலும் திராவிட குடும்ப மொழிகள் கிளைத்திட வைத்ததமிழ், தாயாக விளங்கி தனக்கென ஒரு மொழிக் குடும்பத்தை உருவாக்கி தன்னைச் சுற்றி வேர்களாகவும் விழுதாகவும் மொழிகள் கிளை பெற்றிருப்பினும் தன்னிலை மாறாத உன்னத நிலையுடன்நிலை பெற்று விளங்குவது இதன் தனித்தன்மையாகும்.

**3. பொதுமைப்பண்பு**

உலகின் எந்த இயற்கை மொழிக்கும் இல்லாத சிறப்பு மிக்க இலக்கணக் கட்டமைப்பு கொண்டது தமிழ்மொழி. தமிழின் இலக் கணப் பொதுமைப் பண்பு நெறிகள் மொழிக்குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் இதர இயற்கைமொழி அனைத்தும் பயனுறும் வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

**4. நடுநிலைமை**

தமிழின் இலக்கணவிதி உன்னத நெறியுடனான பன்முகத் தன்மைகொண்டது. எனினும் இதன் இலக்கண விதிகள் வேறு எதனுடனும் சாராமல் தனித்தியங்கி நடு நிலையுடன் விளங்குவது.

**5. தாய்மைத்தன்மை**

தமிழ் எனும் மூல மொழிதான் மட்டுமே என்ற தன்னலமின்றி தாய்மைப் பண்புடன்திராவிட மொழிக் குடும்பம் உருவாகிட அடிப்படையில் விளங்கியது. பேச்சு மொழியென்றும் இலக்கியவள மிக்கமொழியுள்ளன்றும் பல்வேறு தன்மையுள்ளமொழிக் குடும்பத்தில் முதலாய் ஏனையவற்றுக்குத் தொடக்கமாய் விளங்கும் தாய்மைப் பண்பு ஏனைய இயற்கை மொழிகளைவிட சிறப்பானது.

**6.பண் பாட்டுக்கலையறிவு பட்டறிவின் வெளிப்பாடு**

தமிழின் உன்னதமே அதன் இலக்கிய வனங்கள்தாம். தமிழரின் அகத்திணைக் கோட்பாடும் புறத்திணைக் கோட்பாடும் இலக்கியப் படைப்பாளர்களான முன்னோர்களின் பண்பாட்டுக் கலையறிவின் வெளிப்பாடாகும். அகத்திணை, புறத்திணை மட்டுமல்லாமல் மெய்யியல்கோட்பாடும், அறவழிக் கோட்பாடும் வேறெந்த இயற்கைமொழிப் படைப்பிலும் தமிழில் உள்ளஅளவுக்கு இல்லை. இந்த இலக்கிய வளமே தமிழ்ப் புலவர்பெருமக்களின் அறிவுப் புலன்சான்றாக இன்றளவும் திகழ்கிறது.

**7. பிறமொழித் தாக்கமில்லா தனித்தன்மை**

உலகில் நிலவும் மொழிக் குடும்பங்களில் மூலமாழியாய்த் திகழும் மொழிகள் யாவும் வேர்ச சொல்லாக்கத் திறன்குறை வால் பிறமொழிகளின்கூறுகளை சில துறைகளில் தாங்கிநிற்கின்றன. வினைகளால் ஒரு புதியதுறை சார்ந்த சொற்களை தமிழில் எளிதாக உருவாக்கும் அளவுக்கு இலக்கணவளம் செறிந்தது தமிழ்.

ஆகையினால் கடந்த காலமாயினும் சரி நிகழ்காலமாயினும் சரி எதிர்காலமாயினும் சரி எக்காலத்திலும் சமூகப்பண்பாட்டில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப தனித்தன்மையுடன்தகுேரிய இலக்கண செழுமையுடன் தமிழில் புதிய சொற்களை, துறைகளை உருவாக்குதல் எளிது.

கம்யூட்டர் எனும் 20ஆம் நூற்றாண்டு சாதனம் உலகெங்கும் பலதுறைகளில் பரவிய போன்றே தமிழ் நிலத்திலும் காலூன்றியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்கு...

னார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எவ்வாறு நடைபெற்றது என்பது தனக்குத் தெரியும் எனவும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் பயங்கரவாதிகள் தொடர்பிலான விடயம் சரியானது எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

தன்னால் கைது செய்யப்பட்டவர்களே நீதிபதிகள் குழாத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்ட அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உண்மையாகவே யார் செய்தார் என்பதனை எவரும் இன்னும் கூறவில்லை எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துக் கூறுமாறு நீதிமன்றம் தன்னிடம் கோரிக்கை விடுத்தால், அல்லது உத்தரவு பிறப்பித்தால், யார் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டார்கள் என்பதனை கூறுவதற்கு தான் தயாராகவுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், அதனை மிகவும் இரகசியமாக பேணுவது நீதிபதிகளின் பொறுப்பு எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ம-7,10)

## மாத்தறையில்...

அவர் வருகை தந்துள்ளார்.

எனினும் சைக்கிள் ரயரின் காற்று வெளியேறியதனால் அவர் அக்குரஸ்ஸ நகரை நோக்கி மோட்டார் சைக்கிளை தள்ளி கொண்டு சென்றுள்ளார்.

இதன் போது உஷ்ணம் மற்றும் சோர்வு காரணமாக சுருண்டு விழுந்து அவர் உயிரிழந்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் 72 வயதான வர்த்தகர் மற்றும் நான்கு பிள்ளைகளின் தந்தை என தெரியவந்துள்ளது.

சடலம் மாத்தறை பொது மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாத்தறை வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையின் பின்னர், இதயத்தின் உயிரணுக்கள் குறைந்தமையினால் மரணம் ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலைக்கு முகங்கொடுக்கும் நோயாளர்கள் கடுமையான நடவடிக்கைகளில் இருந்து விலகி இருப்பதன் மூலம் இவ்வாறான திடீர் மரணங்களை குறைக்க முடியும் என சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7,10)

## ஆணொருவரின்...

நிலையம் ஒன்றில் இருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய ரங்கசாமி நேசரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,10,250)

## அறிக்கை...

கோரி இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி ஆனந்த ஜயமன்னவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையின் போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம இந்த விடயத்தை தெரிவித்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.யு.பி. கரலியத்த மற்றும் மாயாதுன்னே கொரியா ஆகிய இருவர் அடங்கிய நீதியரசர்களின் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற "மாவீரர்" தின நிகழ்வுகளில் கலந்துகொண்ட சிலர் விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்ததாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக அரச தரப்பு சட்டத்தரணி, நீதிமன்றில் ஏற்கெனவே உறுதிமொழி ஒன்றை வழங்கியிருந்தார்.

எனவே, இதுதொடர்பான மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரச தரப்பு ஏற்கெனவே உறுதிமொழி வழங்கியிருப்பதால், இந்த மனுவை மேலும் தொடர வேண்டிய அவசியமில்லை என மனுதாரர் தரப்பு நீதிமன்றத்திற்கு அறிவித்தனர். எனவே, உரிய மனுக்களை வாபஸ் பெறவும் அனுமதி கோரினர்.

இதன்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இதுவரை நடைபெற்ற "மாவீரர்" தின நிகழ்வுகள் தொடர்பாக புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முழுமையான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாக அரச சிரேஷ்ட சட்டத்தரணி விக்கிரம தெரிவித்தார். (ம-7,10)

## அமைச்சர்...

உள்ள இந்தியத் துணை தூதரகத்திற்கு அருகாமையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் நான்கு பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நான்காம் நாள் போராட்ட இடத்திற்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசினேன்.

பாண்டிச்சேரி முதலமைச்சர் எல்லை தாண்டும் மீனவர்களைத் தடுப்பது தொடர்பில் எழுத்து மூலமான உறுதிமொழி தந்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் கடிதம் அனுப்பத் தயாராக இருப்பதாகவும், தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் ஆணையகத்துடன் ஆலோசித்து கடிதம் அனுப்புவதாகவும் கூறியிருக்கின்றார்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசவருமாறு இந்தியத் தரப்பினர் அழைப்பு கொடுத்திருந்தார்கள். நான் அவர்களிடம் கூறியிருக்கின்றேன். இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வரமாட்டார்கள் என்ற எழுத்து மூலமாக உத்தரவாதம் தந்தால் மட்டுமே பேச்சுக்கு வருவேன் என்று கூறியுள்ளேன்.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். விடுவிக்க எனக்கு அழுத்தங்கள் வந்தாலும் எனது நிலைப்பாடு ஒன்றுதான்.

இதனால்தான் இந்தியா என்னை எதிரியாகப் பார்க்கின்றது. ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் மீனவர் பிரச்சினையில் மௌனமாக இருப்பதால் எதிரியாகப் பார்ப்பதில்லை .

ஆகவே, இந்தியத் தரப்பு சாதகமான சமிக்ஞைகளைக் காண்பித்துள்ள நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுங்கள். மீனவர்கள் பக்கமே நான் நிற்பேன் என்றார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். இந்திய துணைத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஐந்து மீனவர்களுக்கு யாழ். இந்திய துணைத் தூதரகத்திற்குள் சென்று இந்திய துணைத் தூதுவருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)


மஹஜன சம்பத
திகதி 2024.03.22
சீட்டிழுப்பு இலக்கம் 5427
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 9 9 4 1 4 0
அத சம்பத — A 4 1 4 0 — சீட்டிழுப்பு இலக்கம் 002
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1457
L 03 34 39 41 L
Double Chance 59932

மெகா பவர்
திகதி 22/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1775
O 08 20 23 58 74
Double Chance 81074

லக்கி 7 VIP
திகதி 2024.03.22
சீட்டிழுப்பு இலக்கம் 0253
Z 9 4 1 9 2 4 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3669
சீட்டிழுப்பு திகதி 22.03.2024
U 08 20 21 48
U 45150

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.22
சீட்டிழுப்பு இலக்கம் 0736
மகரம் 07 26 39 43 மகரம்
25364 — 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.03.2024 வெற்றி வாரம் 135
ஆங்கில எழுத்து O — 6 7 0 8 3 1
P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,701,064.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2401 — வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 22.03.2024 — தினம் வெள்ளி
04 20 52 57 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,738,090.40

சனிதா
திகதி 2024.03.22 வெற்றி வாரம் 4562 வர்ணம் செம்மஞ்சள்
12 18 27 31 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,861,748.40

சசிரி
வெற்றி வாரம் 457
சீட்டிழுப்பு திகதி 2024.03.22
19 27 33
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,628,080/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4113 — வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.22 — தினம் வெள்ளிக்கிழமை
26 30 32 49 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 13,269,497.60

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 18 01 20 21 54
1577 — 22.03.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,461,447.00
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி: 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2227
சீட்டிழுப்பு திகதி: 2024.03.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.101,026,738.40
19 33 40 73 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொத்த கொள்வனவு

400g அங்கர்
பால்மா -1045/= மற்றும்
யோக்கட் -54/= மொத்தக்
கொள்வனவுகளிற்கு
எம்மை நாடுங்கள்



(197)
**Happy Super market**
உரும்பிராய்
**077 945 5167**

## தாய்ப்பால்...

குமார் பிரதீபா என்ற பெண் சிசு உயிரிழந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை(22) தாயார் சிசுவுக்கு பாலூட்டிக் கொண்டிருந்த சமயம் சிசு மயங்கி உள்ளது.

இதனை தொடர்ந்து உடனடியாக மதியம் 12:30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிசுவை கொண்டு சென்ற போது சிசு ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

(ம-7.10.60)

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

**(18.04.2024 வரை)**
ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.
கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜீ) (183)
**075 99 811 77**

## தேவை

கணனி
தட்டெழுத்தாளர்
தேவை. (0191)
**077 711 1212**

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300 - 400 m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (0190)
**074 349 4087**

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) இப்பொழுது எம்மிடம்.

**(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)**
**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



**ஆர்க் . என் . கம்பனி**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9, வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020
(187)
Hotline : 071 535 7799/ 071 973 9917

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 265 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - | 288 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 187 /= | |
| 1 Kg சம்பா | - | 230 /= | Max 5Kg |
| 1 Kg தீட்டல்பச்சை | - | 165 /= | |
| 1 Kg அரிசி மா | - | 200 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 288 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - | 1940 /= | |
| 450g நெஸ்டமோல்ட் | - | 780 /= | |
| 01 Lux, lifeboy சவர்க்காரம் | - | 145 /= | ~~160/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - | 1455 /= | ~~1550/=~~ |
| 70g Baby Soap | - | 115 /= | ~~145/=~~ |
| 750g சுபோஷ மா | - | 550 /= | ~~590/=~~ |
| 180ml Chick சம்போ | - | 390 /= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - | 54 /= | ~~80/=~~ |

**1045/=**



~~1110/=~~

(197)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8591)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.



சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777**
(C-8591)

## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்
தொடர்புகளுக்கு : (0176)
**074 17 37 684**

## விற்பனைக்கு

01. லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
02. தனங்கிளப்பு சந்திக்கு அருகாமையில் காணி விற்பனைக்குண்டு. (0184)

**077 172 1074**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்...

**33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவு விலையில் புறொயிலர், கல்பேட், ஊர்ச் சேவல், பேரன்ஸ், முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.**

◆ 24 மணி நேர சேவை.
◆ யாழ். மாவட்டம் முழுவதும் Transport இலவசம்
◆ முட்டை(medium) சில்லறை விலை 40/=,(medium) மொத்த விலை 39/=
பெரியமுட்டை சில்லறை 44/=, மொத்தம் 43/=
◆ Halal Fresh Chicken (ஹலால் இறைச்சி)
புறொயிலர் இறைச்சி 1,250/=
புறொயிலர் இறைச்சி மொத்த விலை 1,100/=
◆ கல்பேட் 1 Kg - 1,000/=
பேரன்ஸ் 1 Kg இறைச்சி 1,400/=
ஊர்க் கோழி 1 Kg - 1,250/=

(180)

**New City Farm**
8,8A Sinnakadai Market, Jaffna
021 430 3354
076 359 3354

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.02.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கு

**அமரர் திருமதி இராமச்சந்திரன் கனகபுஸ்பராணி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் காமாட்சி அம்பாள் மண்டபத்தில் (பலாலி வீதி, உரும்பிராய்) இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**
(195)
**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

## காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

❖ நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
❖ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
❖ உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
❖ 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
❖ குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
❖ ஒரு பரப்பின் விலை நாலரை இலட்சம் 450,000/=

(192)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
**தொடர்பு : 071 173 3911, 076 853 5022**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org